salona Cotspin LIMITED

"Shree Sakthi Kunj"
9, Ramalinga Nagar, IV Cross, S.B. Colony,
Coimbatore - 641 011. Tamil Nadu, INDIA
✆ Off : 0422 - 2454415
Email : info@salonagroup.com
Web : www.salonagroup.com

July 23, 2025

To

The Listing Department,
National Stock Exchange of India Limited
Exchange Plaza, Bandra – Kurla Complex
Bandra (E), Mumbai - 400 051

SYMBOL - SALONA

Dear Sir/Madam

Sub : Regarding Newspaper publication under Regulation 30 and Regulation 47(1) of the SEBI (Listing Obligations and Disclosure Requirements), 2015

Pursuant to provisions of Regulation 30 read with Schedule III and Regulation 47(1) of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we enclose herewith the copies of the newspaper advertisement published by the Company in the following newspapers on July 23, 2025, regarding the notice to shareholders for transfer of equity shares of the Company to Investor Education and Protection Fund **("IEPF")** Authority in line with the provisions of Section 124 of the Companies Act, 2013 read with the Investor Education and Protection Fund Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2016.

(i) English: Trinity Mirror
(ii) Tamil: Makkal Kural

A copy of the Notice is also posted on the website of the Company www.salonacotspin.com

Kindly take the above on record.

Yours Truly,
For **Salona Cotspin Limited**

SALONA COTSPIN LIMITED COIMBATORE - 641 011

Rajkumari R
Company Secretary & Compliance Officer

Encl.:as above

Parliament adjourned amid protests

New Delhi, July 23:

Both Lok Sabha and Rajya Sabha were adjourned till 2 PM on Wednesday following continued opposition protests, mainly over the Special Intensive Revision (SIR) of electoral rolls in Bihar.

Rajya Sabha was adjourned within a minute of resuming as opposition MPs demanded a discussion on the issue. Lok Sabha functioned briefly, during which Union Sports Minister Mansukh Mandaviya introduced the 'National Sports Governance Bill, 2025'.

Earlier, both Houses faced similar disruptions. Speaker Om Birla warned against placard protests, urging MPs to maintain decorum. The opposition has demanded that Prime Minister Modi address Parliament and the nation on key issues, including the Pahalgam terror attack and the ongoing SIR exercise.

Congress MP Manickam Tagore also submitted an adjournment motion seeking a discussion on the Bihar voters' list revision.

CII Surface and Coating Expo 2025 wraps up with resounding finish

Chennai, July 23:

"One of the proudest achievements of CII Surface and Coating Expo 2025 is that the three-day event recorded participation from 303 Exhibitors from 17 countries, 21,000 visitors and facilitated 378 scheduled B2B meetings and 15 product launches. The expo also hosted six sectoral conferences featuring 175 speakers including 50 international experts and drew close to 1,000 technical delegates.

As part of the Academia – Industry Skill Connect we had a participation of 890 engineering students who engaged directly with the industry and registered for internships and employment opportunities. This is a concrete step in bridging the gap between academic training and industrial needs," said Dr U Kamachi Mudali, Chairman of Surface and Coating Expo 2025 in his valedictory address at the Confederation of Indian Industry Southern Region (CII-SR), organized fifth edition of Surface and Coating Expo 2025.

"With Six high-impact conferences, the SCE 2025 has reinforced India's standing as a serious platform for global collaboration in surface engineering and corrosion control," Dr Kamachi Mudali added.

The concurrent event, CORTEM 2025 conference brought renewed urgency to the fight against corrosion, a national concern costing India over Rs.12 lakh crore every year. Industry leaders and government stakeholders called for a unified National Corrosion Policy and enhanced coordination to mitigate infrastructure losses.

The exhibition floor highlighted cutting-edge technologies in nano coatings, pipeline protection, corrosion mapping, digital monitoring systems, and sustainable surface solutions. "India must lead globally by combining advanced materials, digital transformation, and engineering science to protect public infrastructure and industrial assets," Dr Kamachi emphasized.

Dr Kamachi also announced that the next edition of Surface & Coating Expo will include Painting sector and will be renamed as CII Surface, Paint & Coating Expo 2027 which will be held from June 17–19, 2027 at Chennai, expanding to 25,000+ sq. mts. to meet growing demand from Indian and international participants.

Auxilo Finserve unveils GlobalEd

Chennai, July 23:

GlobalEd provides loan sanctions in 3 days, provides complete support across travel and post-landing services.

India, July , 2025: Auxilo Finserve, has introduced 'Auxilo GlobalEd', its new all-Inclusive Education Loan designed for students wanting to pursue higher education overseas. Under Auxilo GlobalEd, the entire expense of tuition fees, travel, accommodation, laptop, study materials, and living expenses are covered, providing students with a complete end-to-end overseas education solution.

To ensure complete peace of mind for students and parents, the company has also partnered with a network of trusted third-party service providers to offer end-to-end support, including luggage purchase and handling, air-ticket bookings, international SIM cards, and post-landing assistance.

"We understand the challenges that students and parents undergo while pursuing admission in international universities. To enable a seamless transition, we have introduced Auxilo GlobalEd, so that students can focus on their academic journey without distraction" informed Shweta Guru, CBO – Overseas Education, Auxilo Finserve.

India set to become World's 3rd largest economy by 2028: Morgan Stanley

Nwe Delhi, July 23:

India is poised to become the world's third-largest economy by 2028 and could more than double its size to reach $10.6 trillion by 2035, according to a report released by Morgan Stanley on Wednesday.

The report forecasts that by 2030–2035, three to five Indian states — including Maharashtra, Tamil Nadu, Gujarat, Uttar Pradesh, and Karnataka — will each have economies nearing $1 trillion, placing them among the top 20 global economies.

As per the latest data, Maharashtra, Gujarat, and Telangana currently lead in economic size, while Chhattisgarh, Uttar Pradesh, and Madhya Pradesh have shown the most improvement in rankings over the past five years.

India is expected to contribute nearly 20% of global economic growth in the next decade, becoming a key driver of earnings for multinational corporations.

Highlighting the importance of India's federal structure, the report notes that states play a central role in fiscal management, attracting investments through competitive policy-making, and enabling ease of doing business — all of which are crucial to sustaining growth.

"India's competitive federalism will determine whether the country can double its per capita income in the next seven years, become a global manufacturing hub, and sustain strong stock market performance," the report said.

The report also emphasizes the growing economic power of states as India heads towards becoming a $10.6 trillion economy by 2035. With control over key policy areas, states significantly influence the country's overall development trajectory.

Over the past decade, India has witnessed a surge in infrastructure development. The Centre has doubled capital expenditure from 1.6% of GDP in FY2015 to 3.2% in FY2025, resulting in a 60% rise in highways, a doubling of airports, and a fourfold increase in metro networks.

National programmes like PM Gati Shakti, Bharatmala, Sagarmala, the National Infrastructure Pipeline, and UDAN have complemented state-level initiatives. The report underscores that while the Centre leads these programmes, successful implementation heavily depends on state participation, especially in sectors like energy, water, and urban development.

SBI Life's insurance plan with premium return

In an evolving financial landscape, individuals are increasingly seeking solutions that offer not just protection, but also tangible value over time. While traditional term insurance provides essential life cover, many aspire for plans that offer more - security for their loved ones, along with the reassurance of returns if all goes well.

SBI Life – Smart Swadhan Supreme is designed to meet this very need. This individual, non-linked, non-participating life insurance savings plan offers dual benefit: life Insurance cover in case of uncertainties, and 100% return of total premiums paid if the life assured outlives the term — combining security with savings in one smart solution.

Key Benefits

Life Cover + Return of Premium : In case of an unfortunate demise of the life assured during the policy term, the nominee receives the higher of sic Sum Assured 11 times the Annualized Premium, 105% of Total Premiums Paid# till the date of death, If the Life Assured survives the full term, they get return of 100% of Total Premiums Paid.

Flexible Premium and Policy Terms : Choose from premium payment terms of 7, 10, 15 years, or Regular Pay, Policy duration ranges from 10 to 30 years, Suitable for every life stage — whether you're starting your career or planning retirement,

Entry Point : Minimum basic sum assured starts at ₹25 lakh, Entry age: 18 to 60 years, Maturity age: Up to 75 years.

Optional Rider for Enhanced Protection : SBI Life - Accident Benefit Rider : Option A: Accidental Death Benefit (ADB), Option B: Accidental Partial Permanent Disability Benefit (APPD)

For an extra safety net during unexpected, life-altering events.

Every milestone in life — be it a child's future, your retirement, or a dream home — deserves a financial plan that's both dependable and rewarding. SBI Life – Smart Swadhan Supreme isn't just about protection; It gives you the confidence to live fully today, knowing that your family's tomorrow is secure.

Apraava Energy impacts 2 million lives through CSR initiatives

Chennai, July 23:

Apraava Energy, a leading integrated energy solutions provider, has reached its 2021 goal of positively impacting over two million lives through 232 community-focused projects across 560+ villages in 12 states.

Its Integrated Village Development Model supports rural communities through targeted interventions in agriculture, education, healthcare, and livelihoods. Partnering with over 30 NGOs, Apraava aligns its efforts with the UN Sustainable Development Goals.

Key highlights include:

Empowering 12,000+ women and supporting women entrepreneurs through initiatives like Aarohan, Project Uday, and Udyogini.

Enhancing youth employability via Jai Jawan Raksha Academy and rural STEM programs.

Environmental efforts: 2.5 lakh trees planted, 400+ watershed structures built, and 12,000+ farmers assisted in reducing stubble burning.

Solar interventions in 46 villages, including solar streetlights, off-grid systems, and local youth training.

Healthcare support through mobile medical vans and upgraded PHCs.

MD Rajiv Ranjan Mishra said, "Our efforts go beyond CSR — they represent our core belief in 'Energy in Action' and aim to uplift underserved communities sustainably."

CSR Head Dr. Priyesh Modi added, "This milestone shows what's possible through meaningful community engagement. We remain committed to inclusive growth and long-term impact."

Apraava plans to expand its initiatives further, deepen partnerships, and continue advancing its sustainability mission.

Chennai Airport's phase 2 expansion on fast track, set for completion by March

Chennai, July 23:

The second phase of expansion at Chennai International Airport is progressing swiftly, with the Airports Authority of India (AAI) targeting March 2026 for completion.

AAI Chairman Vipin Kumar, along with a high-level team from New Delhi, inspected the construction works and will continue the review on Wednesday. The visit focused on evaluating progress and emphasizing adherence to the timeline to meet rising passenger demand and improve efficiency.

The new terminal, spread across 86,135 sq. meters, will include modern amenities and significantly boost capacity. With an investment of Rs.1,207 crore, it will feature eight entry gates, 60 check-in counters, 10 X-ray scanners, nine remote boarding gates, eight aerobridges, and advanced baggage systems.

The expansion comes in response to the airport's increasing traffic — from 2.2 crore passengers in 2015 to an expected 3.5 crore by end-2025.

Originally proposed in 2017 and funded by the Ministry of Civil Aviation, the overall expansion spans 2.36 lakh sq. meters. Phase 1, covering 1.49 lakh sq. meters and costing Rs.1,260 crore, was delayed due to COVID-19 but was inaugurated by Prime Minister Narendra Modi on April 8, 2023.

Following Phase 1's launch, the old Terminal 3 was demolished to make way for Phase 2. Upon completion, the airport will operate four integrated terminals — T1, T2, T3, and T4 — with a combined annual capacity exceeding 3.5 crore passengers and over 500 aircraft movements daily.

The upgraded design will offer seamless connectivity for both domestic and international travelers, easing congestion and reducing wait times. Officials reiterated the importance of speeding up construction to keep pace with Chennai's growing aviation needs.

Silver hits all-time high, crosses Rs. 1.14 lakh per kg

New Delhi, July 23:

Silver prices continued their strong rally, hitting a record high by crossing Rs. 1.14 lakh per kilogram, driven by firm global cues and steady domestic demand.

According to the India Bullion and Jewellers Association (IBJA), silver rose Rs.1,028 on Tuesday to Rs.1,14,493 per kg, surpassing its previous high of Rs.1,13,867 set on July 14. The futures market mirrored the surge, with the September 5 silver contract on the Multi Commodity Exchange (MCX) climbing 0.39% to Rs.1,15,500 per kg.

Gold prices also saw notable gains. The price of 24-carat gold jumped Rs.612 to Rs.99,508 per 10 grams, while 22-carat gold rose to Rs.91,149 and 18-carat gold to Rs.74,631 per 10 grams, as per IBJA data.

Global markets echoed this trend. On the Comex exchange, silver rose 0.27% to $39.44 per ounce, while gold inched up 0.26% to $3,415.20 per ounce.

Analysts point to global economic uncertainty, rising industrial demand for silver, and investor preference for precious metals as safe-haven assets as key drivers behind the surge.

"All eyes are now on the upcoming US Manufacturing and Services PMI data. In the short term, gold may remain range-bound, with support at Rs.98,500 and resistance around Rs.1,00,500 on MCX," said Jateen Trivedi of LKP Securities.

New Vice President likely by August end

New Delhi, July 23:

The Election Commission is expected to announce the Vice Presidential election schedule within the next 48–72 hours, following the resignation of Jagdeep Dhankhar. The new Vice President is likely to take office by the end of August.

President Droupadi Murmu formally accepted Dhankhar's resignation, which came nearly two years before his term was to end. As per Article 68(2) of the Constitution, the election must be held "as soon as possible."

Sources say the Commission began preparations after receiving formal intimation from the Home Ministry. A notification is expected within 2–3 days. As per the Vice-Presidential Elections Act, the entire process — including nominations, scrutiny, and polling — must be completed within 32 days of the notification.

SALONA COTSPIN LIMITED

CIN - L17111TZ1994PLC004797

Registered Office : SF NO 74/12 & 75/3, Sathy Road, Pungampalli Village, Sathyamangalam – 638402

Website – www.salonacotspin.com Phone – 0422-2454415

NOTICE TO SHAREHOLDERS

TRANSFER OF EQUITY SHARES OF THE COMPANY TO INVESTOR EDUCATION AND PROTECTION FUND (IEPF) AUTHORITY

Notice is hereby given that pursuant to Section 124 of the Companies Act, 2013 read with Rule 6 of the Investor Education and Protection Fund Authority (Accounting, Audit, Transfer and Refund) Rules, 2016 ("the Rules"), the Company is required to transfer equity shares in respect of which Dividends have not been paid or claimed for seven consecutive years or more shall be transferred to the demat account of the IEPF Authority.

In Compliance with the act read with the Rules, individual communication has been sent to all the shareholders at their registered address, whose Equity shares are liable to be transferred to IEPF during the Financial Year 2025-26, for taking appropriate action. A list of such shareholders who have not encashed their dividend(s) is available on the website of the Company, www.salonacotspin.com.

Shareholders are requested to note that in case the dividend(s) are not claimed by October 23, 2025, the Unclaimed Dividend for the Financial Year 2017-18 will get transferred to IEPF. Further, the corresponding equity shares in respect of which the dividend(s) remain unclaimed for seven consecutive years shall also be transferred in favour of IEPF Authority without any further notice to the shareholders in the following manner:

In case the equity shares are held -

- In Physical form: the Company would issue new share certificate in lieu of original shares for the purpose of transfer to IEPF authority and upon such issue, the original share certificate will stand automatically cancelled. After issue of new share certificates, the Company shall inform the depository by way of corporate action to convert the share certificates, into Demat form and transfer in the favour of IEPF Authority.

- In Dematerialized Form: the company will process the transfer of equity shares by way of corporate action to through the depositories in favour of IEPF Authority's demat account.

Shareholders may note that once the shares and unpaid dividends are transferred to the IEPF, they may claim the same by submitting an online application in Form IEPF-5, available at www.mca.gov.in , and sending a physical copy of the duly signed form along with the requisite documents to the Company's Administrative Office, as specified in the form.

The shareholders may further note that the details of unpaid/unclaimed dividends and shares of the concerned shareholder(s) uploaded by the Company on its website www.salonacotspin.com shall be treated as adequate notice in respect of issue of duplicate share certificate(s) by the Company for the purpose of transfer of shares to IEPF pursuant to Rules. Please note that no claim shall lie against the Company in respect of unclaimed dividend and Equity Shares transferred to the IEPF.

In case the shareholders have any queries on the subject matter, they may contact to the Company's Registrar and Share Transfer Agent at below mentioned address:

MUFG Intime India Private Limited

Address: Surya, 35, Mayflower Avenue, Behind Senthil Nagar, Sowripalayam Road, Coimbatore – 641028, Tamil Nadu. E-mail : coimbatore@in.mpms.mufg.com, Phone: 0422-4958995, 2539835.

For **Salona Cotspin Limited**

Sd/-

Rajkumari R

Company Secretary

Place : Coimbatore

Date : 23.07.2025

அண்ணா தி.மு.க. ஆட்சி அமைந்ததும் நெசவாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்போம்: எடப்பாடி பழனிசாமி உறுதி





தஞ்சாவூர், ஜூலை 23–

அண்ணா தி.மு.க. ஆட்சி அமைந்ததும் நெசவாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்போம் என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

'மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம்' எழுச்சிப் பயணம் தொடங்கியிருக்கும் அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி நெசவுத் தொழிலாளர்கள் மற்றும் சௌராஷ்டிரா சமுதாய பிரமுகர்களுடன் கலந்துரையாடினர். இந்த கூட்டத்தின்போது நெசவுத் தொழிலாளர்களும், பிரமுகர்களும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இக்கூட்டத்தின் இறுதியில் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:–

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் உங்கள் குறைகளை நிவர்த்தி செய்ய தயாராக இருக்கிறோம். நெசவுத் தொழில் கடினமான தொழில். நேற்றைய தினம் திருப்புவனம் பகுதியில் ஒரு நெசவாளர் வீட்டுக்கு சென்று பார்வையிட்டேன். இந்த துறையில் உள்ள குறைகளை கேட்டறிந்தேன். இந்த பகுதியைப் போலவே எங்கள் பகுதியிலும் நெசவாளர்கள் இருக்கிறார்கள். அதனால் நெசவாளர்களிடம் எனக்கு ஈடுபாடு அதிகம்.

எங்கள் பகுதியில் கைத்தறி நெசவுத் தொழில் வளர்ந்திருக்கிறது. ஒரு சேலை இரண்டரை லட்சம் ரூபாய் வரை விற்கப்படுகிறது. சிந்தாமணி என்ற பகுதியில் மெயின் ரோட்டில் சதுரடி 25,000 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அந்த அளவுக்கு அப்பகுதி முன்னேறி இருக்கிறது. பெரிய கடைகளை போட்டு ஹோல்சேல் வியாபாரம் செய்கிறார்கள். அங்குள்ள நெசவுத் தொழிலாளர்களே இன்று முதலாளிகளாக வளர்ந்திருக்கிறார்கள். அதற்கு அவர்களின் அர்ப்பணிப்பும் ஒரு முக்கிய காரணம்.

கும்பகோணத்தில் பட்டு நெசவுத்தொழில் குலத்தொழிலாக இருப்பதாக சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். நான் முதல்வராக இருந்த காலத்தில் கைத்தறி தொழிலாளர்கள் அதிக துணியை நெய்ததால் அவை அதிகமாக தேங்கியது. அதனால் அதை அதிகமாக விற்க தள்ளுபடி வழங்க வேண்டும் என்று கேட்டார்கள். நான் 300 கோடி ரூபாயை விடுவித்து அந்த துணிகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தேன். நெசவாளர் கூட்டுறவு சங்கம் வலிமையாக இருக்க பல்வேறு சலுகைகளை எங்கள் ஆட்சிக் காலத்தில் செய்து கொடுத்தோம்.

விலையில்லா பட்டுச்சேலை

பட்டு நெசவு தொழிலாளர்களுக்கு உதவி செய்யும் விதமாக அம்மா கொண்டுவந்த தாலிக்கு தங்கம் என்ற திருமண உதவித் திட்டத்தில் திருமணம் செய்துகொள்ளும் ஜோடிக்கு அரசாங்கமே விலையில்லா பட்டுச் சேலை கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். விசைத்தறி வந்தால், கைத்தறி தொழிலாளர்களின் வாழ்க்கை பாதிக்கப்படும். அதனால் 2 பிரிவினரையும் பாதிக்காமல் சரிசமமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால், ஏழை நெசவாளர்களுக்கு தரமான பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். அம்மாவின் ஆட்சியில் கைத்தறிக்கு 200 யூனிட், விசைத்தறிக்கு 750 யூனிட் மின்சாரம் மானியமாக கொடுத்தோம், பள்ளி மாணவர்களுக்கு சீருடை கொடுத்தோம்.

முன்பெல்லாம் கைத்தறி தொழிலாளர்கள் துணியை நெசவு செய்து கூட்டுறவு சங்கத்தில் கொடுத்த உடனேயே அதற்கான கூலி வழங்கப்பட்டது. ஆனால் தி.மு.க. ஆட்சியில் அந்த பணம் வங்கியில் செலுத்தப்படுவதால் 10 நாள் அல்லது 15 நாள் கழித்துதான் கிடைக்கிறது. எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் அரசின் கவனத்துக்கு இப்பிரச்சினையை எடுத்து சொன்னோம். அதற்காக கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவந்தோம். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

எங்கள் ஆட்சி அமைந்தால்; மீண்டும் நெசவாளர்களுக்கு உடனடியாகக் கூலி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மழைக்காலத்தில் நெசவுத் தொழிலில் முழுமையாக ஈடுபட முடியவில்லை என்று கூறி இருக்கிறீர்கள். அந்த காலத்தில் உதவித் தொகை கேட்டிருக்கிறீர்கள் அதுபற்றி பரிசீலிப்போம்.

கைத்தறியில் உற்பத்தியாகும் துணிகளுக்கு ஜிஎஸ்டியில் இருந்து விலக்கு கிடைக்க மத்திய அரசிடம் பேசுவோம். குறைந்த வட்டியில் கடன் தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளீர்கள். அதை கவனத்தில் கொண்டு செயல்படுவோம். எங்கள் அரசு அமைந்தவுடன் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற எங்கள் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

விவசாயம் போன்றதுதான் நெசவுத் தொழிலும். அது மிகவும் கடினமான தொழில். காலம் மாற மாற எல்லா தொழிலும் மாறுகிறது. அதேபோல் நெசவுத்தொழிலிலும் நவீனமாக மாறவேண்டிய கட்டாயம் உள்ளது. அப்படி நீங்கள் மாறுவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்த நாங்கள் தயாராக இருப்போம்'' என்று எடப்பாடி பழனிசாமி நம்பிக்கை கொடுத்தார்.

'மிஸஸ் அண்ட் மிஸ்டர்' திரைப்படத்தில் இசையமைப்பாளர் இளையராஜா பெயர் நீக்கம்: ஐகோர்ட்டில் வனிதா விஜயகுமார் தகவல்

சென்னை, ஜூலை 23–

மிஸஸ் அண்ட் மிஸ்டர் திரைப்படத்தில் இசையமைப்பாளர் இளையராஜா பெயரை நீக்கி விட்டதாக சென்னை ஐகோர்ட்டில் வனிதா விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

நடிகை வனிதா விஜய்குமார் மற்றும் நடன இயக்குனர் ராபர்ட் நடிப்பில் உருவாகியுள்ள மிசஸ் & மிஸ்டர் (MRS & MR) திரைப்படம் வெளியாகியுள்ளது. இந்த திரைப்படத்தில் இசையமைப்பாளர் இளைஞராஜா இசையமைத்து மைக்கேல் மதன காமராஜன் திரைப்படத்தில் இடம்பெற்ற ராத்திரி சிவ ராத்திரி பாடல் இடம்பெற்றுள்ளது. தான் இசையமைத்த பாடலை தன்னுடைய அனுமதியில்லாமல் மிஸஸ் அண்ட் மிஸ்டர் திரைப்படத்தில் பயன்படுத்தி இருப்பதாகவும், பாடலை மாற்றி அமைத்துள்ளதாகவும் இளைராஜா தரப்பில் சிவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது காப்புரிமை மீறிய செயல் என்றும் உடனடியாக அந்த பாடலை திரைப்படத்தில் இருந்து நீக்க உத்தரவிட வேண்டும் எனவும் இளையராஜா மனுவில் தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு, நீதிபதி செந்தில் குமார் ராமமூர்த்தி முன்பு விசாரணைக்கு வந்தபோது இளையராஜா இசையமைத்த பாடலை பயன்படுத்துவதோடு அவரின் பெயரும் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. தயாரிப்பாளர் வனிதா விஜயகுமார் சார்பில் எக்கோ நிறுவனத்திடம் அனுமதி பெற்று தான் அந்த பாடல் பயன்படுத்தப்பட்டுள்ளதால் காப்புரிமை மீறல் இல்லை என குறிப்பிட்டார். இதனையடுத்து, மனு குறித்து தயாரிப்பாளர் வனிதா விஜயகுமார் பதிலளிக்க உத்தரவிட்டிருந்தார்.

வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, இளையராஜா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஏ.சரவணன், படத்தில் இளையராஜா பெயரை பயன்படுத்த கூடாது என தடை விதிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

அப்போது வனிதா விஜயகுமார் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் ஸ்ரீதர், இளையராஜாவின் 4850 பாடலை சோனி மியூசிக் நிறுவனம் வாங்கியுள்ளதாகவும், அவர்களிடமிருந்து பாடலை வாங்கியதாக தெரிவித்தார். மேலும் படத்தில் இளையராஜாவின் பெயர் பயன்படுத்தப்பட்டதை நீக்கிவிட்டதாக குறிப்பிட்டார். இதையடுத்து வழக்கை விசாரித்து நீதிபதி இந்த வழக்கில் சோனி மியூசிக் நிறுவனத்தையும் சேர்க்குமாறு உத்தரவிட்டு வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 18ஆம் தேதி ஒத்தி வைத்தார்.

''நானே போரை நிறுத்தினேன் என 25வது முறையாக டிரம்ப் பேச்சு: மோடி மவுனம் காப்பது ஏன்?'' காங்கிரஸ் கேள்வி

வாஷிங்டன், ஜூலை 23–

அமெரிக்க அதிபர் டிரம்ப் மீண்டும் இந்தியா – பாகிஸ்தான் இடையேயான போரை தான் மத்தியஸ்தம் செய்து நிறுத்தியதாகவும், இதனால் மிகப்பெரிய அணு ஆயுதப் போர் உருவாவது தவிர்க்கப்பட்டதாகவும் கூறினார். இவ்வாறு அவர் கூறுவது 25வது முறையாகும் என்பதால் இது வெள்ளி விழா என்று காங்கிரஸ் கட்சி விமர்ச்சித்துள்ளது.

வெள்ளை மாளிகையில் நேற்று இரவு நடைபெற்ற நிகழ்ச்சியின்போது, இந்தியா – பாகிஸ்தான், காங்கோ – ருவாண்டா இடையே போர்களை நிறுத்தியிருக்கிறோம் என்று அதிபர் டிரம்ப் கூறினார். அவர்கள் 5 ஜெட் விமானங்களை சுட்டுவீழ்த்தினர். அவர்களை நான் அழைத்துப் பேசினேன். கேளுங்கள். உங்களுடன் இனி வர்த்தகம் இருக்காது. இவ்வாறு நீங்கள் செய்தால், உங்களுக்கு நல்லதல்ல என்றேன். அவர்கள் இருவருமே மிக சக்தி வாய்ந்த அணு ஆயுத நாடுகள். அவர்களை அப்படியே விட்டிருந்தால் அது எங்குக் கொண்டுசென்று முடிந்திருக்கும் என்று அனைவருக்கும் தெரியும். ஆனால், நான் அதனை நிறுத்தினேன் என்று டிரம்ப் கூறியிருக்கிறார்.

இந்தியா – பாகிஸ்தான் இடையே போரை நிறுத்தியதாக நேற்று பேசியது வரை கடந்த 73 நாள்களில் டிரம்ப் 25 முறை கூறிவிட்டார். நேரடியாகவே இந்தியா அதனை மறுத்தபோதும் கூட அமெரிக்க அதிபர் இந்தப் பேச்சை நிறுத்தவில்லை.

25வது முறையாக அதிபர் டிரம்ப் இது பற்றி பேசியிருப்பதற்கு காங்கிரஸ் கடுமையாக விமர்சனம் செய்திருக்கிறது. அவரது பேச்சின் மூலம், டிரம்போ வெள்ளி விழாவே கண்டுவிட்டார் ஆனால் பிரதமர் மோடி இன்னமும் மவுனம் காத்து வருகிறார் என்று கூறியிருக்கிறது.

ராம்கோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 47, P.S.K. நகர், ராஜபாளையம் 626108, தமிழ்நாடு

கார்ப்பரேட் அலுவலகம்: ஆராஸ் கார்ப்பரேட் மையம், 6வது தளம், எண்:98A, டாக்டர்.ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004.

Ph.: 044-28478585 Fax: 044-28478597 E-Mail: investors_grievances@ramcoind.com

CIN : L26943TN1965PLC005297; Website : www.ramcoindltd.com

60வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு

அன்பான உறுப்பினர்களுக்கு,

1. வருடாந்திர பொதுக்கூட்டத்தை நடத்த கம்பெனிகள் சட்டம் 2013ன் பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் அதன் கீழுள்ள விதிகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 மற்றும் கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகம் மற்றும் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியாவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின்படி, கம்பெனியின் அறுபதாவது வருடாந்திர பொதுக்கூட்டம் ("60th AGM") புதன்கிழமை, க3 ஆகஸ்ட், 20உ5 அன்று காலை 11.30 மணிக்கு காணொளி காட்சி ('VC') மூலமாக கூட்டப்படுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
2. மேற்கூறிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, 60வது வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பு உட்பட வருடாந்திர அறிக்கையின் இணைய இணைப்பு, நிறுவனத்தில் அல்லது அந்தந்த வைப்புத்தொகை பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஜூலை 21, 2025 அன்று மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது. 2024-25 வருடாந்திர அறிக்கையின் சரியான பாதை உட்பட இணைய இணைப்பு, QR குறியீடு ஆகியவற்றை வழங்கும் கடிதம், தங்கள் மின்னஞ்சல் முகவரிகளைப் பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. மேலும், இது நிறுவனத்தின் இணைய தளமான www.ramcoindltd.com மற்றும் பங்குச் சந்தைகளின் இணையதளம் பிஎஸ்இ லிமிடெட் : www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் www.india.com ஆகியவற்றில் பதிவேற்றப்பட்டுள்ளது. 60வது வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிவிப்பு சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் ("CDSL") இணையதளம் www.evotingindia.comலும் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளது.
3. வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது மற்றும் மின்னணு வாக்குப்பதிவு வழிமுறைகள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் உள்ளது.
4. காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் மற்றும் தங்கள் மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் மொபைல் எண்ணைப் பதிவு செய்யாத உறுப்பினர்கள், கம்பெனியின் இணையதளத்தில் உள்ள படிவம் ISR–1ஐப் பயன்படுத்தி அதைப் புதுப்பிக்கலாம். அதை கீழ்க்குறிப்பிட்டுள்ள முகவரி/மின்னஞ்சல் முகவரியில் கம்பெனிக்கு தெரிவிக்க வேண்டும். டீமேட் வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளரை அணுகலாம்.
5. வருடாந்திர பொதுக்கூட்டத்தில் அல்லது தொலைதூர மின்னணு வாக்குப் பதிவின் மூலம் வாக்களிக்க தகுதி உள்ள பங்குதாரர்களை தீர்மானிக்கும் கட் ஆப் தேதி o6.08.2025.
6. காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் மற்றும் கம்பெனி/டெபாசிட்டரி பங்கேற்பாளரிடம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாத உறுப்பினர்கள் மற்றும் அறிவிப்பு அனுப்பிய பின்னர் பங்குகளை பெற்று உறுப்பினர் ஆனவர்கள் மற்றும் கட் ஆப் தேதி o6.08.2025 அன்று பங்குகளை வைத்துள்ளவர்கள் வருடாந்திர பொதுக்கூட்டம் கூட்டுவது பற்றிய அறிவிப்பின் புள்ளி எண்: 12(D) or (F)ல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மற்றும் கூட்டம் நடைபெறும்போது மின்னணு வாக்குப்பதிவின் மூலம் தங்கள் வாக்குகளை அளிக்கலாம்.

உறுப்பினர்கள் மேலும் கவனத்தில் கொள்ள வேண்டியது:

ஏ) கட் ஆப் தேதியன்று உறுப்பினர்கள் வைத்துள்ள சமபங்குகளின் விகிதத்தில் வாக்களிக்கும் உரிமை இருக்கும்.

பி) தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு ஞாயிற்றுக்கிழமை, 10 ஆகஸ்ட் 2025 அன்று காலை 9.00 மணிக்கு தொடங்கி செவ்வாய்கிழமை, 12 ஆகஸ்ட் 2025 அன்று மாலை 5.00 மணிக்கு முடிவடைகிறது. இந்த கால கட்டத்தில், கட் ஆப் தேதியன்று பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் மின்னணு முறையில் அவர்களது வாக்கை பதிவு செய்யலாம்.

சி) VC வசதி மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் தீர்மானங்களில் வாக்களிக்காத உறுப்பினர்கள் மற்றும் அவ்வாறு செய்ய தடை விதிக்கப்படாதவர்கள், தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு முறை மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் வாக்களிக்க தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

டி) வருடாந்திர பொதுக்கூட்டத்திற்கு முன்னதாக தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் VC வசதி மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்கலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை கிடையாது.

இ) வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்பது மற்றும் சிடிஎஸ்எல் மின்னணு வாக்குப்பதிவு முறையில் மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் அல்லது சந்தேகங்கள் இருப்பின் நீங்கள் helpdesk.evoting@cdslindia.comக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது டோல் ப்ரீ எண்: 1800 210 99 11ஐ தொடர்பு கொள்ளலாம்.

கார்ப்பரேட் அலுவலகம்:
ராம்கோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
98–ஏ டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை
மயிலாப்பூர், சென்னை 600 004
இமெயில்: investors_grievances@ramcoind.com
தேதி: 23.07.2025

ராம்கோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டுக்காக
S. பாலமுருகசுந்தரம்
கம்பெனி செயலாளர் & சட்டத்தலைவர்

மதுரை ஆதீனத்தின் முன் ஜாமினை ரத்து செய்யக்கோரி சென்னை ஐகோர்ட்டில் காவல்துறை மனு

சென்னை, ஜூலை 23–

மதுரை ஆதீனத்தின் முன்ஜாமினை ரத்து செய்யக்கோரி சென்னை ஐகோர்டில் காவல்துறை தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டது.

தருமபுரம் ஆதீனம் ஏற்பாட்டில் சென்னை காட்டாங்குளத்தூரில் நடைபெற்ற சைவ சிந்தாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக 2025 மே 2ம் தேதி மதுரை ஆதீனம் காரில் வந்து கொண்டிருந்தார். உளுந்தூர்பேட்டை சேலம் ரவுண்டானா பகுதியில் மதுரை ஆதீனத்தின் கார் மீது மற்றொரு கார் மோதி விட்டு நிற்காமல் சென்றாக மாநாட்டில் பேசிய மதுரை ஆதீனம், தன்னை திட்டமிட்டே கொலை செய்ய சதி நடந்துள்ளது என்றும், இதில் பாகிஸ்தானை சேர்ந்த தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருக்கலாம் எனவும் தெரிவித்திருந்தார்.

இது சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவியது. இந்த நிலையில் இவரது பேச்சு இரு மதத்தினரிடையே குழப்பத்தையும், மோதலையும் உருவாக்கும் வகையிலேயே இருப்பதாக கூறி சென்னையை சேர்ந்த வழக்கறிஞர் ராஜேந்திரன் என்பவர் சைபர் கிரைம் போலீசில் புகார் கூறியிருந்தார். அதன் அடிப்படையில் அவர் மீது 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இதற்கு முன்ஜாமீன் கேட்டு சென்னை ஐகோர்ட்டில் அமைந்துள்ள மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் அவர் மனுதாக்கல் செய்திருந்தார்.

முன்ஜாமீன் மனுவை விசாரித்த நீதிமன்றம் அவருக்கு முன்ஜாமீன் வழங்கியது. அவரது வயதை காரணம் காட்டி அவரிடம் காவல்துறை நேரில் சென்று விசாரிக்கலாம் என்று தெரிவித்திருந்தது. அதனடிப்படையில் கடந்த 20ம் தேதி சம்மந்தப்பட்ட விசாரணை அதிகாரி அவரது மடத்துக்கே சென்று தனது விசாரணையை தொடங்கினார். ஆனால் மதுரை ஆதீன மடத்துக்கு சென்ற அவருக்கு எந்த ஒத்துழைப்பும் வழங்கவில்லை என தெரிவித்தார்.

குறிப்பாக ஆதீனமோ அல்லது ஆதீனத்தின் ஆதரவாளர்களோ யாரும் விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை. இதை அடுத்து அவரது சார்பில் சென்னை ஐகோர்ட்டில் விசாரணைக்கு ஒத்துழைக்காத காரணத்தினால் அவரது முன்ஜாமீனை ரத்து செய்ய வேண்டும் என்று இன்றைய தினம் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு இன்று நீதிபதி நிர்மல் குமார் முன்பு விசாரணைக்கு வர உள்ளது. அப்போது விசாரணைக்கு ஒத்துழைக்காத காரணத்தினால் அவரை காவல் துறை கஸ்டடியில் எடுத்து விசாரிக்க அவரது முன்ஜாமீனை ரத்து செய்ய வேண்டும் என்று காவல்துறையில் வாதம் முன்வைக்கப்பட உள்ளது.

சஸ்பெண்ட் செய்யப்பட்ட மயிலாடுதுறை டி.எஸ்.பி.,க்கு நெஞ்சுவலி; மருத்துவமனையில் அனுமதி

சென்னை, ஜூலை 23–

போலீஸ் அதிகாரிகள் 'டார்ச்சர்' செய்வதாக பேட்டி கொடுத்து சஸ்பெண்ட் செய்யப்பட்ட மயிலாடுதுறை டி.எஸ்.பி., சுந்தரேசன் நெஞ்சுவலி காரணமாக சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார்.

கடந்த 1996ல் காவல் துறையில் எஸ்.ஐ.,யாக பணியில் சேர்ந்தவர் சுந்தரேசன். இவர், உளவுத்துறை, சட்டம் ஒழுங்கு, குற்றப்பிரிவு என, பல பிரிவுகளில் பணிபுரிந்துள்ளார்.

ஐந்து ஆண்டுகளாக சென்னையில் உள்ள மாநில மனித உரிமை கமிஷன் டி.எஸ்.பி.,யாக பணிபுரிந்து வந்தார். போலீசாருக்கு எதிராக அறிக்கை சமர்ப்பித்ததால், 2024ம் ஆண்டு அக்டோபரில் சுந்தரேசன் மயிலாடுதுறை மாவட்ட மதுவிலக்கு அமலாக்கப்பிரிவுக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டார். அப்போதே பிரச்னை எழுந்தது. மனித உரிமை கமிஷன் கட்டுப்பாட்டில் இருந்த சுந்தரேசன், ஒரு மாதத்திற்கு பின், மயிலாடுதுறைக்கு சென்று பணியில் சேர்ந்தார். அங்கு அவரது வாகனம் உயர் அதிகாரிகள் உத்தரவின் பேரில் பறிக்கப்பட்டது. இதையடுத்து, போலீஸ் அதிகாரிகள் டார்ச்சர் செய்வதாக சுந்தரேசன் பேட்டி கொடுத்தார். பின்னர், சீருடை பணியாளர் விதிகளை மீறி, ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக, சுந்தரேசனை 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டார். இந்த சூழலில், சஸ்பெண்ட் செய்யப்பட்ட மயிலாடுதுறை டி.எஸ்.பி., சுந்தரேசனுக்கு இன்று நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, அவர் சென்னை ராயப்பேட்டை மருத்துவமனை அவசர பிரிவில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். அங்கு அவருக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர். தற்போது அவர் உடல்நிலை சீராக உள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் காவல்துறையினருக்கே தி.மு.க.,வினரால் பாதுகாப்பில்லாத நிலை: அண்ணாமலை குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை 23–

தமிழகத்தில் காவல்துறையினருக்கே தி.மு.க.,வினரால் பாதுகாப்பில்லாத நிலை இருக்கிறது என்று அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகம் முழுவதும் சட்டம் ஒழுங்கு சந்தி சிரித்துக் கொண்டிருக்கிறது. பத்து வயது குழந்தை மீது பாலியல் தாக்குதல் நடத்தியவனை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. கிட்னி திருடும் தி.மு.க., கும்பலை விசாரிக்க நேரமில்லை. காவல்துறையினருக்கே தி.மு.க.,வினரால் பாதுகாப்பில்லாத நிலை இருக்கிறது.

மதுரை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகளுக்கு வழங்கப்பட்ட முன்ஜாமினை ரத்து செய்யக் கோரி, தமிழக காவல்துறை உயர்நீதிமன்றத்தில் மனு கொடுத்திருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

கடந்த சில நாட்களுக்கு முன்பாக, குடல் இறக்கம் அறுவைச் சிகிச்சை முடிந்து ஓய்வில் இருக்கும் மதுரை ஆதினத்தை, இரண்டு நாட்களுக்கு முன்பு சென்று, விசாரணை என்ற பெயரில் சுமார் ஒரு மணி நேரம் துன்புறுத்தி விட்டு, தற்போது விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை என்று தி.மு.க., அரசின் காவல்துறை கூறுவது, உள்நோக்கம் கொண்டது. அறுவை சிகிச்சை முடிந்து ஓய்வில் இருக்கும் மதுரை ஆதினத்தை தொடர்ந்து துன்புறுத்தும் போக்கை, தி.மு.க., அரசின் காவல்துறை கைவிட வேண்டும். உடனடியாக, அவரது முன்ஜாமினை ரத்து செய்யக் கோரும் மனுவைத் திரும்பப் பெற வேண்டும் என்று தி.மு.க., அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

தருமபுரி அருகே டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து வீட்டின் மீது மோதிய அரசுப் பேருந்து: சிறுமி பலி

தருமபுரி, ஜூலை 23–

தருமபுரி மாவட்டம் உழவன்கொட்டாய் பகுதியில், சாலையோரம் இருந்த வீட்டின் மீது ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த அரசுப் பேருந்து மோதி விபத்துக்குள்ளானதில் சிறுமி பலியானார்.

தருமபுரியின் கிராமப் பகுதியிலிருந்து நகரப் பகுதிக்கு இன்று காலை 2பி என்ற எண்ணுடன் இயங்கும் அரசுப் பேருந்து சென்றுள்ளது.

அப்போது பேருந்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து, சாலையோரம் இருந்த வீட்டின் மீது மோதியது. இதில், வீட்டின் முன் விளையாடிக் கொண்டிருந்த நரசிம்மன் என்பவரது மகளும், பேருந்து ஓட்டுநர் தேவராஜ் ஆகியோர் படுகாயமடைந்தனர். இருவரும் உடனடியாக தருமபுரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிறுமி மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி பலியானார்.

விபத்தில் அரசுப் பேருந்து ஓட்டுநர் தேவராஜ் படுகாயமடைந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

SALONA COTSPIN LIMITED

CIN - L17111TZ1994PLC004797
Registered Office : SF NO 74/12 & 75/3, Sathy Road, Pungampalli Village, Sathyamangalam – 638402
Website – www.salonacotspin.com Phone – 0422-2454415

பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

நிறுவனத்தின் பங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (IEPF) ஆணையத்திற்கு மாற்றுதல்

நிறுவனங்கள் சட்டம், 2013 இன் பிரிவு 124 உடன் சேர்த்து முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கியல், தணிக்கை, பரிமாற்றம் மற்றும் பணத்தைத் திரும்பப் பெறுதல்) விதிகள், 2016 ("விதிகள்") விதி 6 இன் படி, நிறுவனம் தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு ஈவுத்தொகை செலுத்தப்படாமலோ அல்லது கோரப்படாமலோ உள்ள பங்குப் பங்குகளை IEPF ஆணையத்தின் டீமேட் கணக்கிற்கு மாற்ற வேண்டும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

விதிகளுடன் படிக்கப்பட்ட சட்டத்தின்படி, 2025–26 நிதியாண்டில் IEPFக்கு மாற்றப்பட வேண்டிய பங்குதாரர்களின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்காக தனிப்பட்ட தகவல் தொடர்பு அனுப்பப்பட்டுள்ளது. தங்கள் ஈவுத்தொகையை (டிவிடெண்ட்களை) ரொக்கமாக்காத அத்தகைய பங்குதாரர்களின் பட்டியல் நிறுவனத்தின் வலைத்தளமான www.salonacotspin.com இல் கிடைக்கிறது.

பங்குதாரர்கள், அக்டோபர் 23, 2025 க்குள் ஈவுத்தொகை(கள்) கோரப்படாவிட்டால், 2017–18 நிதியாண்டிற்கான கோரப்படாத ஈவுத்தொகை IEPFக்கு மாற்றப்படும் என்பதை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகளாக ஈவுத்தொகை(கள்) கோரப்படாமல் இருக்கும் தொடர்புடைய பங்குப் பங்குகளும், பின்வரும் முறையில் பங்குதாரர்களுக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல் IEPF அதிகாரசபைக்கு சாதகமாக மாற்றப்படும்:

பங்குப் பங்குகள் வைத்திருந்தால் இயற்பியல் வடிவத்தில்: IEPF அதிகாரசபைக்கு மாற்றுவதற்காக அசல் பங்குகளுக்குப் பதிலாக நிறுவனம் புதிய பங்குச் சான்றிதழை வழங்கும், மேலும் அவ்வாறு வழங்கப்பட்டவுடன், அசல் பங்குச் சான்றிதழ் தானாகவே ரத்து செய்யப்படும். புதிய பங்குச் சான்றிதழ்களை வழங்கிய பிறகு, பங்குச் சான்றிதழ்களை டிமேட் படிவமாக மாற்றவும், IEPF அதிகாரசபைக்கு ஆதரவாக மாற்றவும் நிறுவனம் டெபாசிட்டரிக்கு கார்ப்பரேட் நடவடிக்கை மூலம் தெரிவிக்கும். டிமெட்டீரியலைஸ் செய்யப்பட்ட படிவத்தில்: நிறுவனம் IEPF அதிகாரசபையின் டிமேட் கணக்கிற்கு ஆதரவாக டெபாசிட்டரிகள் மூலம் கார்ப்பரேட் நடவடிக்கை மூலம் ஈக்விட்டி பங்குகளை மாற்றுவதைச் செயல்படுத்தும்.

பங்குகள் மற்றும் செலுத்தப்படாத ஈவுத்தொகைகள் IEPFக்கு மாற்றப்பட்டவுடன், www.mca.gov.in இல் கிடைக்கும் படிவம் IEPF5 இல் ஆன்லைன் விண்ணப்பத்தை சமர்ப்பித்து, முறையாக கையொப்பமிடப்பட்ட படிவத்தின் ஒரு பிரதியை தேவையான ஆவணங்களுடன் நிறுவனத்தின் நிர்வாக அலுவலகத்திற்கு படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அனுப்புவதன் மூலம் பங்குதாரர்கள் அதைக் கோரலாம் என்பதை கவனத்தில் கொள்ளலாம்.

பங்குதாரர்கள் மேலும் கவனத்தில் கொள்ள வேண்டியது என்னவென்றால், நிறுவனம் தனது வலைத்தளமான www.salonacotspin.com இல் பதிவேற்றியுள்ள செலுத்தப்படாத/உரிமை கோரப்படாத ஈவுத்தொகைகள் மற்றும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்(கள்) பங்குகளின் விவரங்கள், விதிகளின்படி IEPFக்கு பங்குகளை மாற்றுவதற்காக நிறுவனத்தால் நகல் பங்குச் சான்றிதழ்(கள்) வழங்குவது தொடர்பாக போதுமான அறிவிப்பாகக் கருதப்படும். உரிமை கோரப்படாத ஈவுத்தொகை மற்றும் IEPFக்கு மாற்றப்பட்ட ஈக்விட்டி பங்குகள் தொடர்பாக நிறுவனத்திற்கு எதிராக எந்த உரிமைகோரலும் இருக்காது என்பதை நினைவில் கொள்க.

பங்குதாரர்களுக்கு இந்த விஷயத்தில் ஏதேனும் கேள்விகள் இருந்தால், அவர்கள் நிறுவனத்தின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளலாம்:

MUFG இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட்

முகவரி: சூர்யா, 35, மே·ப்ளவர் அவென்யூ, செந்தில் நகர் பின்புறம், சௌரிபாளையம் சாலை, கோயம்புத்தூர் 641028, தமிழ்நாடு.

மின்னஞ்சல்: coimbatore@in.mpms.mufg.com, லைபேசி: 04224958995, 2539835

சலோனா கோட்ஸ்பின் லிமிடெட்
Sd/-
ராஜ்குமாரி ரா
நிறுவன செயலாளர்

இடம்: கோயம்புத்தூர்
தேதி: 23.07.2025